**இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டடம் (கடன் இல் 1993 எஸ்ஆர்ஐ) - 2014**

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படை நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2003 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2003 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய கடன் உடன்படிக்கையின் 6 ஆம் பட்டோலையின் 28 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகர திட்டமில் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை அமுலாக்கும் முகவராக உள்ளது. வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் கிராமப் பகுதிகள் மற்றும் மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, மூதூர் மற்றும் பொலநறுவை நகரப் பகுதிகளில் வசிக்கின்ற ஏறத்தாழ 969,000 மக்களிற்கான பாதுகாப்பான நீர் வழங்குதல் மற்றும் 32,572 குடும்பங்களிற்கான சுகாதார வசதிகளை வழங்குதல் என்பன செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிதி மற்றும் நிறுவன ரீதியான நிலைபேறும்தன்மை மற்றும் செயற்திட்டத்தில் பங்குபற்றுகின்ற மாகாண சபைகள், பிரதேச சபைகள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்கள் என்பவற்றின் நிறுவனரீதியான இயலளவையை அதிகரிப்பதற்கு செயற்திட்டம் உதவிபுரிகின்றது. 1993 எஸ்ஆர்ஐ - (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆரம்ப மொத்தக் கிரயம் ரூபா 8,310.22 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 86.34 மில்லியனாதுடன் அதில் ரூபா 5,802.91 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60.29 மில்லியன் அல்லது 70 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ரூபா 291.63 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.03 மில்லியன் அல்லது 4 சதவீதம் சமுதாய அடிப்படை அமைப்புக்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 14,297 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 131.03 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் அதில் ரூபா 7,911 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 72.51 மில்லியன் அல்லது 55 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய கடன் இல 2276-எஸ்ஆர்ஐ இன் கீழ் விசேட நிதியத்திலிருந்தும் மற்றும் கடன் இல் 2275 - எஸ்ஆர்ஐ இன் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய சாதாரண மூலதன ஒதுக்கங்களிலிருந்து ரூபா 6,720 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 61.59 மில்லியன் ஆன குறைநிரப்பு கடன்கள் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திருத்தப்பட்ட கிரய மதிப்பீடுகளின் பிரகாரம் மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கலிற்காக மேலதிக கிரயம் ஏற்பட்டமை காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியால் கடன் இல. 2757- எஸ்ஆர்ஐ மற்றும் கடன் இல. 2758 என்பவற்றின் கீழ் ரூபா 1,637 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 15 மில்லியன் தொகையான மேலதிக இரண்டு கடன்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2003 நவம்பர் 21 இல் தொடங்கியிருந்ததுடன் 2009 மார்ச் 31 இல் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்ட காலம் 2011 செப்தெம்பர் 30

வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆசிய அபிவிருத்தி வங்கி 2013 பெப்ரவரி வரை முழுக் கடன் தொகையையும் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் மீதி வேலைகள் இலங்கை அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதிகளில் 2014 திசெம்பர் 31 வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பாரத்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற

அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 பெறவேண்டியவைகள்**

---

ஒப்பந்தகாரரொருவரிடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 2.7 மில்லியன் தொகை சுத்திகரிப்பு பொறியின் பரீட்சிப்பிற்காக ஒப்பந்தகாரரின் சார்பில் 2010 இல் செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட ரூபா 4.7 மில்லியன் தொகையான மின்சார கட்டணங்களில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 41 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான பெறுமதி சேர் வரியின் (வற்) கொடுப்பனவு மீதான மாதாந்த அறிக்கை கொள்வனவு வழிகாட்டலின் 5.4.12 ஆம் பிரிவு, மற்றும் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றிற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டும். மேலும், கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள், அரச ஒப்பந்த பதிவாளருடன் உடன்படிக்கையொன்று பதிவுசெய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்துடன் ஈடுபட்டுள்ள 09 ஒப்பந்தகாரர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகளின்மை**

---

அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஐ.அ.டொலர் 80,946 மற்றும் ரூபா 802,610 பெறுமதியான தலைமை வேலைகள், மூல நீர் பிரதான பரிமாற்றம், சுத்திகரிப்பு பொறி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பிரதான பரிமாற்றம் மற்றும் இருக்கின்ற தண்ணீர் சுத்திகரிப்பு பொறியின் புனரமைப்பு என்பவற்றின் நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கலின் கீழ் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட சிபாரிசுசெய்யப்பட்ட மற்றும் கட்டாயமான உதிரிப்பாகங்களுடன் தொடர்புபட்ட பொருள் பெறுகை குறிப்புகள், வழங்குநர் விலைப்பட்டியல் போன்றன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், விநியோகக் குழாய்களின் வழங்கல் மறறும் பொருத்துதல் மற்றும் உயர்த்தப்பட்ட கோபுரங்களின் நிர்மாணம் என்பவற்றின் ஒப்பந்தங்களின் கீழ் 3,143 கனமீற்றர்

வெடி பொருட்கள் தோண்டப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 11 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய வெடிபொருட்களின் பயன்பாடு அல்லது விற்பனை என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 72.51 | 7,911.00 | - | - | - | 71.33 | 7,742.77 |
| இலங்கை அரசாங்கம் | 58.52 | 6,385.00 | 200.00 | 1.50 | 199.04 | 57.34 | 6,776.05 |
| மொத்தம் | 131.03 | 14,296.00 | 200.00 | 1.50 | 199.04 | 128.67 | 14,518.82 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டியலிடப்பட்ட நேர காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்தலை மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு போன்ற ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி முழுமையான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டி இருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது வட மத்திய மாகாணத்திலுள்ள கிராமிய பகுதிகள் மற்றும் மட்டக்களப்பு, ஹம்பாத்தோட்டை, மூதூர் மற்றும் பொலநறுவை நகரங்களில் வாழுகின்ற அண்ணளவாக 969,000 மக்களிற்கு பாதுகாப்பான தண்ணீர் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட தண்ணீர் இணைப்புக்கள் தொடர்புபட்ட புள்ளிவிபரங்கள் உடனடியாக கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) செயற்திட்டமானது கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட மத்திய மாகாணத்திலுள்ள கிராமிய பகுதிகள் மற்றும் மட்டக்களப்பு, ஹம்பாத்தோட்டை, மூதூர் மற்றும் பொலநறுவை நகரங்களில் வாழுகின்ற 32,572 குடும்பங்களிற்கு சுகாதார வசதிகள் வழங்குவதற்கு ரூபா 135 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆரம்ப இலக்குகள் உள்ளபடியான செயலாற்றலுடன் பொருந்துகின்றதிற்கு காலத்திற்கு காலம் குறிப்பிடத்தக்களவு மீளாய்வு செய்யப்பட்டது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 126 மில்லியன் ஏற்படுவதன் மூலம் 22,511 குடும்பங்களிற்காக மாத்திரம் சுகாதார வசதிகள் வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பெறப்பட்ட தகவலின் பிரகாரம், 09 ஒப்பந்தங்களின் கீழ் ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மூதூர் மற்றும் பொலநறுவையில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தின் சகல நிர்மாண வேலைகளும் 2012 சனவரி 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விநியோகக் குழாய்களின் வழங்கல் மற்றும் பொருத்துதல் மற்றும் உயர்த்தப்பட்ட கோபுரங்களின் நிர்மாணம் என்பவற்றிற்காக ஒப்பந்தகாரருக்கான இடைக்கால கொடுப்பனவுகளின் தீர்ப்பனவிலுள்ள தாமதத்தில் ஐ.அ.டொலர் 38,023 மற்றும் ரூபா 229,167 தொகையான நிதிக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணத்திற்காக சுவீகரிக்கப்பட்ட மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, பொலநறுவை மற்றும் மூதூரிலுள்ள 26 துண்டுக் காணிகளிற்கான உரிமையாண்மை 2014 திசெம்பர் 31 வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) எவ்வாறாயினும், மட்டக்களப்பு மற்றும் மூதூரில் மேற்கொள்ளப்பட்ட 03 நிர்மாண வேலைகள் ரூபா 1,888 மில்லியன் ஏற்பட்ட பின்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் நிலையான பூர்த்தியாக்கல் சான்றிதழுடன் 2011 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது, 2014 திசெம்பர் 31 வரையும் இறுதி பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 229.5 மில்லியன் தொகை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய பங்களிப்புகளில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது பொது திறைசேரியால் நிரூபிக்காத போதிலும் இதன்படி கணக்கீட்டுச் சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தது.

### 3.5 நிதிக் கட்டுப்பாடுகளுடன் தொடர்புபட்ட விடயங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.